# ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களும் அவை எதிர்நோக்கும் சவால்களும்

**சு.பிரதீஸ்[1] & சி. விஜயகுமார்[2]**

பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்[1]
பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்[2]
[1]piriharees@gmail.com & [2]vijai114@gmail.com

## *ஆய்வுச்சுருக்கம்*

"ஊர்காவற்றுறை பிரதேசத்தின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்" தொடர்பான இவ் ஆய்வானது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணப்படும் தீவுக் கூட்டங்களில் ஒன்றான ஊர்காவற்றுறைப் பிரதேசத்தினை மையமாகக் கொண்டு ஆராய்வதுடன் எதிர்காலத்தில் இங்கு மேற்கொள்ளப்படும் கைத்தொழில் சாத்தியங்கள் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் இங்கு வாழும் மக்களின் வறுமைக் குறைப்பில் எத்தகைய தாக்கம் செலுத்துகின்றது என்பதை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றது. அவ்வகையிலே இவ் ஆய்வானது முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றது. முதலாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக இங்கு முறையான எழுமாற்று மாதிரி (System Sampling) முறையினை பின்பற்றி ஆய்வுக் குடியிலிருந்து மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் முறைகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தரவுகளைச் சேகரிப்பதற்காக மீன்பிடி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கைத்தொழில்கள், தும்புக் கைத்தொழில்கள், இரசாயனம் உற்பத்திக் கைத்தொழில்கள், பனை தென்னை வளம் சார் உற்பத்திகள், சீமேந்து சார்ந்த உற்பத்திகள், விவசாய உற்பத்திகள் போன்ற தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகளானவை புள்ளி விபரணவியல் ஆய்வு அணுகு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வகையில் சிறிய மற்றும் நடுந்தரக்கைத்தொழில்கள் ஊர்காவற்றுறைப்பிரதேசத்தின் வறுமைக்குறைப்பிலும் பிரதேச அபிவிருத்தியிலும் குறிப்பிடக்கூடிய இடத்தைப் பெற்று வருகின்றது. எனினும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை துரிதமாக முன்னேற்றக்கூடிய தன்மையை கொண்டு காணப்படவில்லை எனலாம்.

**திறவுச் சொற்கள் :-** அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள், பொருளாதார நிலை

## *அறிமுகம்*

இலங்கையானது துரித அபிவிருத்தி பாதையை நோக்கி சென்றுக்கொண்டு இருக்கும் இந்த தருணத்தில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திகாக சிறியமற்றும் நடுத்தரக்கைத்தொழில்கள் விசேட பங்களிப்பைச் செய்யமுடியும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை அதிகரிக்க வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவது மட்டுமன்றி பிரதேச ரீதியான பொருளாதார அசமந்தப்போக்கினை ஒழிப்பதற்கும் சிறிய மற்றும் நடுந்தரக் கைத்தொழில்களுக்கு விசேட இயலுமை காணப்படுகின்றது. நாம் இவ்வியலுமையை புரிந்துகொள்வதுடன் அவ்வியலுமையை முன்னேற்றிவிக்க வகை செய்யவேண்டும். பொருளாதாரத்துறையானது விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைகள் துறை என மூன்று பிரதான துறையாக காணப்படுகின்றன. இவற்றில் கைத்தொழில்துறையானது பிரதான துறையாகவும் வேண்டப்படும் துறையாகவும் காணப்படுகின்றது. இக்கைத்தொழில் துறையானது சிறிய கைத்தொழில்கள் நடுந்தரக்கைத்தொழில்கள், பாரிய கைத்தொழில்கள் என வகைப்படுகின்றது. இன்றைய நவீன பொருளாதாரங்களில் சிறிய மற்றும் நடுந்தரக்கைத்தொழில்கள் மிகவும் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை வழங்குகின்றன. அவ்வகையில் பிரதேச ரீதியான வளர்ச்சி செயற்பாடுகளிலும் இவை பிரதான இடம் பெறுகின்றன. எனவே யாழ்மாவட்டத்தில் காணப்படும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுந்தர கைத்தொழில்கள் எந்தகைய பங்களிப்பை கொண்டுள்ளன எனவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது எனவும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆய்வு செய்வதாகவும் இவ்வாய்வு காணப்படுகின்றது.



ISBN 978-955-627-120-1

## ஆய்வுப்பிரதேசம்:-

ஆய்வுப்பிரதேசமாக ஊர்காவற்றுறைப் பிரதேசம் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் எல்லைகளானது வடக்கே காரைநகரும், கிழக்கு மற்றும் தெற்கே வேலணைப்பிரதேசம் மேற்கே கடல்வளத்தைக் கொண்டமைந்த பிரதேசமாக ஊர்காவற்றுறைப் பிரதேசம் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் மக்களுக்கு துரித சேவை வழங்குவதை மையமாகக் கொண்ட பிரதேச செயலகமும் 15 கிராம சேவகர் பிரிவுகளும் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தின் நிலப் பரப்பை நோக்கும் போது 45.11 சதுர கிலோமீற்றர் கொண்டதாக காணப்படுகின்றது. சனத்தொகைக் கணிப்பீட்டின்படி 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் 38015 நபர்களாகக் காணப்பட்ட சனத்தொகையின் பருமனானது 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4538 குடும்பங்களைக் கொண்ட 14660 நபர்களாகக் காணப்படுகின்றது. இவ்வாறு சனத்தொகையின் பருமன் குறைவடைவதில் உள்நாட்டு யுத்தம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. மேலும் சமுர்த்தி உதவிகளைப் பெறும் குடும்பங்களாக 1334 குடும்பங்கள் காணப்படுகின்றன. பல வளங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படும் இப்பிரதேசத்தின் வறுமைக் குறைப்பில் கடற்றொழில் விவசாயம், சுயதொழில்கள் என்பன பிரதான இடம் பெறுகின்றன. கடல் வளத்தை அதிகம் கொண்ட இப்பிரதேசத்தின் மிக முக்கியமான வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடியும் அதனோடு இணைந்த ஏனைய தொழில்களும் காணப்படுகின்றன.

## ஆய்வுப் பிரச்சனை

சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலானது மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் இயந்திரமாக காணப்படுவதுடன் குறித்த தொழிலில் ஈடுபடும் மக்களின் வறுமையைக் குறைப்பதுடன் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகின்றது. (Brown, Madoff,Hamilton 2005) இந்நிலையில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் குறிப்பிடக் கூடியளவு காணப்படும் அதேவேளை பலர் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். எனவே இச் சிறுகைத்தொழில்,குடிசைக் கைத்தொழில்கள் என்பன இப்பிரதேச மக்களின் வறுமைக் குறைப்பிலும், வாழ்க்கைத்தர முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றதா? என்பதே ஆய்வுப் பிரச்சனையாக காணப்படுகின்றது.

## ஆய்வு வினாக்கள்

01. சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களால் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதா?
02. சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களால மக்களின் வாழக்கைத்தரம் அதிகரிக்கப்பட்டுள்ளதா?
03. உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுகின்றதா?

## ஆய்வின் நோக்கம்

- சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படும் முன்னேற்றங்களை அறிதலுடன் அவர்கள் எதிர்நோக்கக்கூடிய சமூக, பொருளாதார சவால்களையும் அறிதல்.
- இப்பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது என்பதை அடையாளங் காணல்.
- சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் இளைஞர் மற்றும் யுவதிகளின் வேலைவாய்ப்பில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை அறிதல்.
- இப்பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை அறிதலும் அவற்றுக்கு ஆலோசனை வழங்கலும்.



ISBN 978-955-627-120-1

## ஆய்வின் கருதுகோள்

01. ஊர்காவற்றுறை பிரதேச மக்களின் வேலை வாய்ப்பில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழல்கள் முக்கிய இடம்பெறுகின்றது.
02. மக்களின் வாழ்க்கைத்தர அதகரிப்பில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன.
03. வளங்கள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்படுகின்றது.

## இலக்கிய மீளாய்வு

பிரதேசங்களின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் பங்களிப்பு ஏற்படுத்துகின்ற தாக்கம் என்பன தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளில் இவ் ஆய்வானது சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் ஏற்படுத்துகின்ற தாக்கம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

**Brown,madoff, hamiliton (2005)** என்பவர்கள் மேற்கொண்ட கைத்தொழில் துறைகள் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஆய்வில் நடைமுறையில் காணப்படும் அதிகளவு படிப்பினைகள் மற்றும் ஆய்வுகளின் படி தேசிய பொருளாதாரத்தால் நடாத்தப்பட்ட ஆய்வில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் அவற்றின் அமைவு, பெருமளவு ஊதியம் பெறல், அதனது கொடை மற்றும் நிரந்தரமான தொழில் வாய்ப்பு என்பன தொடர்பில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துவதில்லை எனவும் எப்படியாயினும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் இளைஞர் மற்றும் யுவதிகளிற்கு வேலை வாய்ப்பு உருவாக்கத்தில் மிகவும் முக்கிய இடம் பெறுகின்றது. என்பதை நடைமுறை உலகில் காணப்படும் பல்வேறு சான்றுகள் புலப்படுத்துகின்றன. எனக் கூறுகின்றனர். இவர்களது ஆய்வானது விபரண ஆய்வு முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமது ஆய்வுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கு வினாக்கொத்து, களஆய்வு என்பவற்றின் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தியும் மேற்கொண்டுள்ளனர். இவர்களது ஆய்வு முடிவின்படி சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இளைஞர் மற்றும் யுவதிகளிற்கு வேலைவாய்ப்பை வழங்குகின்றன. குறிப்பாக மொத்த வேலைவாய்ப்பில் 12% மேலான பங்களிப்பை இவை கொண்டுள்ளன. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் இவை பெரும் பங்கு வகிக்கின்றன.

**Memba (2012)** என்பவரது கருத்துப் படி சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் முதலீட்டு அனுபவத்தைப் அடிப்படையாகக் கொண்ட முறையைப் பயன்படுத்தியுள்ளதா? என்பதை அறிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தனது ஆய்வில் புள்ளிவிபரவியல் முறையைப் பயன்படுத்தியுள்ளார். இவர் தனது ஆய்வுக்குத் தேவையான தரவுகளைப் பெறுவதற்கு வினாக்கொத்து முறை, களஆய்வு, போட்டிமுறை போன்ற முறைகளோடு 2ம் நிலைத்தரவுகளையும் பயன்படுத்தியுள்ளார். இவரது முக்கிய கண்டுபிடிப்பாக பல்வேறு மாறிகளை அடையாளப்படுத்துகின்றார். அவையாவன வேலையாட்களின் எண்ணிக்கை, தேறிய சொத்துப் பெறுமதி, சந்தைப்பங்கு, விற்பனை என்பனவாகும். இம்மாறிகள் சமூகத்தில் நேர்கணிய தாக்கத்தை ஏற்படுத்தவல்லன. சிறய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு முதலீட்டு அனுபவத்தின் தாக்கம் உண்மையானதும் சாத்தியமானதும் எனக் கண்டு கொண்டுள்ளார்.

**Mba – Okechukwn Ayawa and Cletns LZ Uwnanne Emeti (2014)** என்பவர்களது கருத்துப்படி சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களினுடைய சவால்கள், பிரச்சனைகள் மற்றும் இவைகளுடைய அபிவிருத்தி தொடர்பாக நைஜீரியாவை அடிப்படையாகக் கொண்டு ஆய்வை மேற்கொண்டுள்ளார். இவர்களது ஆய்வானது புள்ளிவிபரவியல் முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்கள் தமது ஆய்வுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கு வினாக்கொத்துமுறை, நேர்காணல்முறை, களத்தகவல்கள் போன்ற முறைகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளையும் பயன்படுத்தியுள்ளனர். இவர்களது ஆய்வு முடிவின்படி பிரதான சவால்களாக குறைவான நிதியிடல் சமூக உட்கட்டமைப்பு, முகாமைத்துவ திறன்களின் குறைவு, மற்றும் பல்வேறு வகையான வரி அறவீடுகள் என்பவற்றை அடையாளப்படுத்தியுள்ளனர்.



ISBN 978-955-627-120-1

David B Ekpenyoung and MO. Nyyong (1992) இவர்கள் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தெழழில்களில் பண்புகள் தொடர்பாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தமது ஆய்வில் விபரண ஆய்வு முறையை பயன்படுத்தியுள்ளதோடு வினாக்கொத்து, கள ஆய்வு முறையைப் பயன்படுத்தி தமது ஆய்வை மேற்கொண்டுள்ளனர். இவர்களது ஆய்வு முடிவின் படி சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களுக்கான நிதியிடலானது இதனை ஆரம்பிப்பவர்களது தனிப்பட்ட சேமிப்புக்களிலிருந்தும் ஏனைய முறை சார்ந்த நிதிநிறுவனங்களிலிருந்தும் மேற்கொள்கின்றனர்.

Viera Bestivinova(2012) இவரது ஆய்வின் படி சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்தல் என்பதனை நோக்கமாகக் கொண்டு இவரது ஆய்வானது ஸ்லோவாக்கியா எனும் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர் தனது ஆய்வினை மேற்கொள்ள விபரண ஆய்வு முறையை பயன்படுத்துகின்றார். இவரது ஆய்வின் படி இன் நாட்டின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாயந்ததாக காணப்படுகின்றது. இவர் சிறிய மற்றும் நடுத்ரக் கைத்தெழழில்களின் வரி முகாதைத்துவம் மற்றும் நிதி முகாதைத்துவம் தொடர்பாக தனது பரிந்துரைகளை முன்வைக்கினறார்.

## ***ஆய்வு முறையியல்***

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் பங்களிப்பு என்பதை ஆய்வு செய்து முடிவுகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரிப்பு இடம்பெற்றுள்ளது.

1. முதனிலைத் தரவுகள் - வினாக்கொத்து, அவதானிப்பு, நேர்காணல்
2. இரண்டாம் நிலைத் தரவுகள் - ஊர்காவற்றுறை பிரதேச செயலக புள்ளிவிபர அறிக்கைகள், கையேடுகள், ஊர்காவற்றுறை பிரதேச சஞ்சிகைகள் இவ்வாறு பெறப்பட்ட சமூக மற்றும் பொருளதாரக் காரணிகள் தொடர்பான தனிப்பட்ட ரீதியிலான வினாக்களுக்கான தரவுகள் புள்ளி விபரணவியல் முறையைப் பயன்படுத்தி விளக்கப்படுகின்றது.

## ***தரவு முன்வைத்தலும் தரவுப் பகுப்பாய்வும்***

### ***கடல்வளம் சார்ந்த உற்பத்திகள்***

கடல் வளத்தை அதிகமாகக் கொண்ட இப்பிரதேசத்தில் மீன்பிடிக் கைத்தொழில் மிகப் பிரதான தொழிலாகவும் அதிக வருமானத்தைப் பெற்றுத் தரும் துறையாகவும் காணப்படுகின்றது. அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை, தம்பாட்டி போன்ற பிரதேசங்கள் பிரதான மீன்பிடித் தளங்களாகக் காணப்படுகின்றது.

**பிரதேச செயலக புள்ளிவிபரத் தரவின் படி இங்கு பிடிக்கப்படுகின்ற மீன்களின் அளவு Kg இல்**

| மீன்பிடித்தளங்கள் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அனலைதீவு | 17171 | 86849 | 134490 | 239860 | 294000 | 316000 | 320000 | 330000 | 335000 |
| எழுவை தீவு | 31950 | 171672 | 292284 | 365070 | 374400 | 392000 | 398000 | 415000 | 480000 |
| ஊர்காவற்றுறை | 3970 | 27358 | 54749 | 22040 | 46800 | 68400 | 75000 | 78000 | 80120 |
| கரம்பொன் | 10730 | 43553 | 87040 | 98780 | 128400 | 168000 | 180000 | 195000 | 198200 |
| மெலிஞ்சிமுனை | 10410 | 49839 | 92320 | 114660 | 144000 | 157000 | 164000 | 172000 | 172500 |
| சின்னமடு | 4910 | 17961 | 31470 | 59410 | 80400 | 94400 | 105000 | 108000 | 108000 |
| தம்பாட்டி | 20530 | 31865 | 74340 | 217900 | 310800 | 332000 | 345000 | 362000 | 365200 |

(Source:- பிரதேச செயலக புள்ளிவிபரக் கையேடு) (2016, 35-37)



ISBN 978-955-627-120-1

மேற்காட்டிய தரவுகளின் படி 2015, 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் அதிகளவான மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. இங்கு பல வகையான மீன்கள் பல வகையான மீன்பிடி நுட்பங்களைப் பயன்படுத்தி பிடிக்கப்படுகின்றன.

**இங்கு மீன்பிடியில் ஈடுபடும் சனத்தொகையை பிரிவு ரீதியாக பின்வருமாறு காட்ட முடியும்**

| GN Dvision | 2011 | | | 2012 | | | 2013 | | | 2014 | | | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | F.F | F.P | F.A | F.F | F.P | F.A | F.F | F.P | F.A | F.F | F.P | F.A | F.F | F.P | F.A | F.F | F.P | F.A |
| Analaitivu | 126 | 529 | 185 | 126 | 529 | 185 | 126 | 529 | 185 | 120 | 525 | 185 | 126 | 525 | 185 | 126 | 525 | 185 |
| Eluvaithivu | 102 | 408 | 160 | 102 | 408 | 160 | 102 | 408 | 160 | 102 | 408 | 160 | 102 | 408 | 160 | 107 | 400 | 160 |
| Paruththiyakaipu | 66 | 264 | 120 | 66 | 264 | 120 | 66 | 214 | 120 | 66 | 264 | 120 | 66 | 266 | 122 | 66 | 264 | 122 |
| Karampon | 88 | 352 | 96 | 88 | 352 | 96 | 88 | 352 | 96 | 88 | 352 | 96 | 88 | 352 | 96 | 88 | 352 | 96 |
| Naranthanai | 270 | 1080 | 354 | 270 | 1080 | 354 | 270 | 1080 | 354 | 270 | 1080 | 354 | 270 | 1080 | 354 | 270 | 1080 | 354 |
| Puliyankoodal | 50 | 200 | 73 | 50 | 200 | 73 | 50 | 200 | 73 | 50 | 200 | 73 | 50 | 200 | 73 | 50 | 200 | 73 |
| Total | 961 | 3869 | 1300 | 1021 | 3989 | 1300 | 104 | 3985 | 1300 | 1300 | 1021 | 3985 | 1021 | 3985 | 1300 | 1041 | 3985 | 1300 |

Source :- Deparmtne of Fisheries (2016), Kayts

FF - மீன்பிடிக்குடும்பம்

F.P - மீன்பிடிக்கும் மக்கள் தொகை

F.A – மீன்பிடிச்செயற்பாடுகள்

இப்பிரதேச கருவாடு உற்பத்தியும் சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது. கருவாடு காயவைத்தல், பொதிசெய்தல் போன்றன. அனலைதீவு, எழுவைதீவு,தம்பாட்டி, ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களில் சிறப்பாக



ISBN 978-955-627-120-1

மேற்கொள்ளப்படுகின்றது. பெண்களின் வேலை வாய்ப்பில் இவை கணிசமான பங்களிப்பை வழங்குகின்றன. மேலும் எழுவைதீவுப் பிரதேசத்தில் கருவாடு காயவைத்தல் தொழிலை விருத்தி செய்யும் நோக்குடன் UNDP நிறுவனம் தமது நிதிப்பங்களிப்பால் கருவாடு பதனிடல் நிறுவனத்தை அமைத்துள்ளது. இப்பிரதேசங்கள் மூலம் மாதாந்தம் உற்பத்தி செய்யப்படும் கருவாடுகள் Kg இல் பின்வருமாறு.

| Amount of Dried fish (MT) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **Division** | **2008** | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| Analaitivu | 280 | 292 | 310 | 310 | 320 | 340 | 320 | 330 |
| Eluvaitivu | 370 | 360 | 400 | 412 | 410 | 425 | 450 | 450 |
| Karampon | 110 | 115 | 115 | 100 | 80 | 105 | 120 | 105 |
| Melincimunai | 80 | 89 | 93 | 90 | 95 | 90 | 95 | 100 |
| Thampaddy | 70 | 70 | 75 | 80 | 82 | 80 | 85 | 90 |

Source: Divional Resource Profile (2016, 38-40)

இவ்வாறாக கருவாடு காயவைத்தல் தொழிலானது அதிகரித்த வருமானத்தைத் தருகின்றது எனலாம். இது வறுமைக் குறைப்பிலும் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது.

மேலும் தம்பாட்டிப் பிரதேசத்தில் UNDP நிறுவனத்தின் உதவியுடன் நண்டு பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தினமும் 600Kg வரையிலான நண்டுகள் இயந்திர சாதனங்களின் உதவியுடன் பதப்படுத்தப்படுகின்றன. இங்கு 60 வரையிலான பெண்கள் வேலை செய்கின்றனர். தீவுப் பிரதேசத்தின் கடற்தொழிலாளர் சங்கமே இதனை நிர்வகித்து வருகின்றது. மேலும் 10 வரையிலான ஆண்கள் இங்கு சந்தைப்படுத்தும் வேலைகளைச் செய்து வருகின்றனர். அனலைதீவு, எழுவைதீவு, கரம்பொன் பிரதேசங்களில் பாசிவளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. தம்பாட்டி, ஊர்காவற்றுறை போன்ற பகுதிகளில் நண்டு வளர்ப்புக் கூடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் இவர்களின் வேலைவாய்ப்பும் அதிகரித்துள்ளது. கடற்தொழில் தொடர்பான வேலைவாய்ப்புக்கள் காணப்பட்ட போதும் பிடிக்கப்படும் மீன் வகைகள் ஏற்றுமதி செய்வதை நோக்கமாகக் கொண்டு காணப்படுவதால் உள்;ர் நுகர்வோர் உயர்ந்த விலையிலேயே நுகர வேண்டியுள்ளது. மேலும் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதில் போதிய மூலதனம் இன்மை இந்திய மீனவர்களின் ‘‘ரோலர்’’ பயன்படுத்தி மீன்பிடித்தல் என்பவற்றால் பாரிய பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

**பனை, தென்னை வள உற்பத்திகள்**

பனை, தென்னை வளத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் ஆய்வுப்பிரதேசத்தில் சிறப்பிடம் பெறுகின்றன. ஊர்காவற்றுறையில் தும்புக்கைத்தொழில் நிறுவனம் காணப்படுகின்றது. இங்கு 70 வரையிலான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத்தும்புக் கைத்தொழிற்சாலையில் கயிறு திரித்தல், விளக்குமாறு, கால்மிதி, தும்புத்தடி போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனலைதீவு எழுவை தீவு போன்ற பிரதேசங்களில் கிடுகு பின்னல் தொழில் சிறப்பிடம் பெறுவதோடு தமது வீடுகளில் இருந்தே குறிப்பிட்ட வருமானத்தை உழைக்க முடிகின்றது. UNDP யின் உதவியுடன் ஊர்காவற்றுறையில் ஸ்தாபிக்கப்பட்ட பனை வெல்ல உற்பத்தியின் மூலம் தினமும் சராசரியாக 12Kg பனை வெல்லம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்குத் தேவையான பதநீர் இப்பிரதேசத்திலிருந்தே பெறப்படுகின்றது. இதற்காக தினமும் ஒருவர் 40L பதநீரை வழங்குகின்றனர். இவ்வாறு 10 பேர் வரையில் வழங்குகின்றனர். மேலும் இந்நிறுவனமானது இப்பிரதேச மக்களிடமிருந்து ஒடியல்மா, பனாட்டு, புழுக்கொடியல் போன்றவற்றை கொள்வனவு செய்கின்றது. 1முப புழுக்கொடியல் 320/= வரையில் இவர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது. மேலும் பனைசார் உற்பத்திகளான



ISBN 978-955-627-120-1

பாய் பின்னுதல், சுளகு தயாரித்தல், நீத்துப்பெட்டி தயாரித்தல், போன்றனவும் இப்பிரதேச மக்களால் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் பனம் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அழகு சாதனப்பொருட்கள், சிரட்டைசார் உற்பத்திகள், சிரட்டைக்கரி உற்பத்திகள் என்பன சிறு வருமானங்களைப் பெற்றுக் கொடுக்கின்றன.

மேலும் சீமேந்துகள் சார் உற்பத்திகள் இங்கு சிறப்பிடம் பெறுகின்றது. அரிகல், பூக்கற்கள், பூச்சாடிகள், தூண்கள் என்பன அமைத்தல் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தம்பாட்டி, ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களில் சிறப்பிடம் பெறுகின்றன. மேலும் உணவு மற்றும் பானங்கள் தொடர்பான உற்பத்திகள் இடம் பெறுகின்றன. உலர் உணவு உற்பத்தி, பொதியிடல், மென்பானம், குளிர்பான உற்பத்திகள், ஊறுகாய், வத்தல், அச்சாறு, பால்சார்ந்த உற்பத்திகள், இனிப்புப் பண்ட உற்பத்திகள் என்பனவும் இடம்பெறுகின்றன. மர அடிப்படையிலான உற்பத்திகள் இடம்பெறுகின்றன. மர அரிவு ஆலை, பனைமரகாலை, தளபாட உற்பத்திகள், சிற்பவேலை, கடைச்சல் வேலை, இடியப்ப உரல், முறுக்கு உரில், அகப்பை உற்பத்திகளும் இடம்பெறுகின்றன. இவை மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதில் மிகப்பிரதான இடம் பெறுகின்றது. சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை நடாத்திச் செல்வதற்கு மூலதனம் தேவைப்படுகின்றது. இம் மூலதனத்தை உருவாக்கக்கூடிய நிலையில் இவர்கள் காணப்படுவதில்லை.

2∴3 பகுதியினர் போதுமான மூலதனத்தை உருவாக்க முடியாதுள்ளனர். இவர்களுக்கு கடன் வழங்குவதற்கு போதியளவான நிதி நிறுவனங்கள் காணப்படுவதில்லை. வணிக வங்கிகளே இங்கு சிறுகடன் வழங்கக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. ஆனால் இவர்களால் வழங்கப்படும் கடன்கள் அதிகளவான வட்டி வீதத்தைக் கொண்டுள்ளன. 4∴5 பகுதியினர் தாம் பெறும் கடன்களை மீளச் செலுத்த முடியாதுள்ளனர். மேலும் இவ்நிறுவனங்கள் கடன் வழங்கும் போது அரச தொழிலில் உள்ளவர்களை பிணையாளர்களாக கேட்கின்றனர். அவ்வாறு அரச தொழிலில் உள்ளவர்கள் பிணை வைப்பதற்கு தயாராகக் காணப்படுவதில்லை. எனவே கடன்களைப் பெற முடியாத நிலை உள்ளது. உற்பத்தி நடவடிக்கைகளில் வளங்கள் போதிய அளவில் பயன்படுத்தப்பட முடியாதுள்ளது. போதுமான நன்னீர் வளம் பற்றாக்குறையாக உள்ளது. பூரண அளவில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு போதிய மூலதனம், இயந்திரங்கள் காணப்படுவதில்லை. சிறியரக படகுகளைப் பயன்படுத்தி பழமை பேணும் முறையிலேயே மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மொத்தமாக இப்பிரதேசத்தில் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 354 இயந்திரப்படகுகள் பயன்படுத்தப்படுவதுடன் இயந்திரமல்லாப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. பாரிய வலு கொண்ட இயந்திரப் படகுகளின் பாவனை காணப்படுவதில்லை. தும்புக்கைத்தொழிற்சாலை காணப்பட்ட போதும் நவீன பொருட்களின் இறக்குமதிகளால் இக்கைத்தொழில்கள் மீது பெருமளவு ஆர்வம் காட்டுவதில்லை.

எனவே இவ் உற்பத்தி குறைதொழில் மட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. மெழுகுதிரி, தையல் பயிற்சிகள் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்டு கைத்தொழில்களை நடாத்துவதற்கான மூலதனங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. ஆனால் தொழிலாளர்கள் இத்தொழில்களில் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை எனலாம். மேலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் பல்வேறு பிரச்சனைகள் காணப்படுகின்றன. இறக்குமதிப் பொருட்களுடன் ஒப்பிடும் போது இவை விலைகூடியவையாக காணப்படுகின்றது. இவை இக் கைத்தொழில் நடவடிக்கைககள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சனைகள் எனலாம். மேலும் மிகவும் தரமான உட்கட்டுமானங்கள் இங்கு காணப்படாமை மிகவும் முக்கிய பிரச்சனையாகும். 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னரே பிரதான வீதி செப்பனிடப்பட்டுள்ளது. உப வீதிகளின் தரம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. மின்சார வசதிகள் தற்காலத்தில் காணப்படினும் அனலைதீவு, எழுவை தீவு போன்ற பிரதேசங்களில் மின் வசதிகள் சீராகக் காணப்படுவதில்லை. அடிக்கடி மின்சாரத்தடைகள் ஏற்படுகின்றன. கால நிலை பாதிப்பு மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. அதிகூடிய வெப்பம் நிலவுவதாகக் காணப்படும் இப்பிரதேசத்தில் சீராக தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத தன்மை காணப்படுகின்றது. யாழ் பிரதேசத்திலிருந்து சுமார் 25Km தொலைவில் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் தமது தொழிலுக்கான சில மூலதனப் பொருட்களைப் பெறுவதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன.



ISBN 978-955-627-120-1

## ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும்

ஆய்வுப் பிரதேசத்தில் 4538 குடும்பங்களைச் சேர்ந்த 14660 நபர்கள் காணப்படுகின்றனர். இவற்றில் சமுர்த்தி உதவிகளைப் பெறும் குடும்பங்களாக 1334 குடும்பங்கள் காணப்படுகின்றனர். அத்துடன் 94 குடும்பங்கள் பெண் தலமை தாங்கும் குடும்பங்களாகவும் காணப்படுகின்றனர். இவ் ஆய்வுப் பிரதேசமானது பெரும்பாலும் கடற்தொழில் விவசாயம், செய்யும் குடும்பங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இதில் ஆண்டின் எக்காலப் பகுதியிலும் மீன்பிடி நடவடிக்கையின் மூலம் வருமானம் பெற முடியாதுள்ளதோடு மீன்பிடி நடவடிக்கையில் காலநிலையின் செல்வாக்கு மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதும் அதிகம் சாத்தியமற்றதாக உள்ளது. விவசாயத்துக்கு தேவையான போதுமான நீர்வளத்தை இங்கு பெறமுடியாதுள்ளது. மேலும் இப்பிரதேச மக்கள் கைத்தொழில் நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடுவதற்கான மூலதனம் பற்றாக்குறையாக காணப்படும் அதேவேளை நிதியீட்ட நிறுவனங்கள் அதிகம் காணப்படாமை பிரச்சனையாகும். தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் பிரச்சனை காணப்படுவதுடன் இறக்குமதிப் பொருட்களுடன் போட்டி போட முடியாத நிலை காணப்படுகின்றது. தரமான கீழ்க்கட்டுமான வசதிகள் காணப்படாததுடன் உற்பத்திகளை தரமாக மேற்க் கொள்ளக் கூடிய தொழில்நுட்ப அறிவு படைத்த ஊழியங்கள் காணப்படுவதில்லை. அத்தோடு அதிகரித்த வறுமை நிலையும் காணப்படுகின்றது. இவை இப்பிரதேச மக்கள் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் எதிர்நோக்கும் பாரிய சவால்கள் எனக் குறிப்பிட முடியும். எனவே கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான போதிய மூலதனம் இன்மை நீர் பற்றாக்குறை, தொழிலாளர் பற்றாக்குறை, போக்குவரத்து வசதிகள், உட்கட்டுமானங்கள், பிரச்சனை காணப்படல், தொடர்பாடல், வறுமை போன்ற பல்வேறு பிரச்சனைகளால் மக்களின் வாழ்க்கைத்தரம் எதிர்பார்த்தளவு முன்னேற்றம் காணப்படவில்லை எனலாம்.

மேற்படி ஆய்வின் முதலாவது ஆய்வுக் கருதுகோளின் படி ஊர்காவத்துறை பிரதேச மக்களின் வேலைவாய்ப்பில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் முக்கிய இடம்பெறுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக காணப்படுகின்றது. இரண்டாவது கருதுகோளின் படி மக்களின் வாழ்க்கைத்தர அதிகரிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதனை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மூன்றாவது கருதுகோளின் படி வளங்களில் உச்ச செயற்றிறனுடன் பயன்படுத்தப்படுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### ஆய்வுப் பிரச்சனைக்கான பரிந்துரைகள்

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டு ரீதியில் வளப்பற்றாக்குறை காணப்படினும் மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வளங்கள் காணப்படுகின்றன என்பதை மறுதலிக்க முடியாதுள்ளது. அதிகளவான கடல்வளத்தைக் கொண்டுள்ள இப்பிரதேசத்தில் கடல்வளம் சார் கைத்தொழில்களை விருத்தி செய்ய முடியும் எனலாம். மேலும் விவசாயம் செய்வதற்கான வளம் காணப்படுகின்றது. புகையிலை, வெங்காயம், மிளகாய், நெல் போன்ற பயிர்கள் பிரதானமாக மேற்கொள்ளக்கூடிய நிலமை காணப்படுகின்றது. எனவே விவசாயம் சார் கைத்தொழில்களை விருத்தி செய்ய முடியும்.

ஆய்வுப் பிரதேசம் ஒப்பீட்டு ரீதியில் அதிக கடல்வளத்தைக் கொண்டுள்ளது. இவ்வாய்வு பிரதேசத்தில் அதிக கடல்வளம் காணப்படுவது ஓர் சாதகமான விடயமாகும். எனவே கடற்றொழில் சார் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

ஊர்காவற்றுறை, தீவுப் பிரதேசங்களில் இந்திய மீன்பிடித் தொழிலாளர்களின் தாக்கம் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. மாதாந்தம் சராசரியாக 20 இந்தியத் தொழிலாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர். எனவே இவர்களின் செல்வாக்கு காணப்படாமல் எமது தொழிலாளர்கள் அதிகமாக மீன்பிடியில் ஈடுபட வேண்டும். மிகக் குறைந்த விலையில் மீன்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதற்கு நியாயமான விலைகள் காணப்படுவதுடன் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். எரி பொருட்களைப் பெறுவதற்கே யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே ஊர்காவற்றுறையில் எரிபொருள்


ISBN 978-955-627-120-1

நிரப்பு நிலையங்கள் காணப்பட வேண்டும். இங்கு வெளிச்சவீடு, சீரான இறங்கு துறைகள் காணப்படுவதில்லை. அது சீர்செய்யப்பட வேண்டும். குளிர்சாதன நிலைகளுடன் களஞ்சியப்படுத்தல் வசதிகள் காணப்படுவதில்லை. எனவே Ice Industry, Coolroom, Cooler வசதிகள் செய்யப்பட வேண்டும். நண்டு பதனிடல் கைத்தொழில் கருவாடு உற்பத்திகளை மேலும் அதிகரிப்பதில் போதிய மூலதனம் காணப்படுவதோடு முயற்சிக்கேற்ற ஊக்குவிப்பு காணப்பட வேண்டும்.

தும்புக் தொழிற்சாலை தற்போது இயங்குநிலை குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலை மாற வேண்டும். வெல்ல உற்பத்திக் கைத்தொழில் இன்னும் அதிகளவான வெல்லம் தொடர்பான உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டிய உள்ளதோடு கயிறு, தும்பு, விளக்குமாறு, கால்மிதி, தும்புத்தடி போன்ற உற்பத்திகளை கொள்வனவு செய்து சந்தைப்படுத்தக்கூடிய நிறுவனங்கள் காணப்பட வேண்டும்.

இங்கு ஏராளமான உணவு சார் உற்பத்திகளில் இங்குள்ள தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். இவ் உற்பத்திகளை ஏனைய பிரதேச உற்பத்திகளிற்கு நிகராக பார்க்காத தன்மை பெரிதும் காணப்படுகின்றது. இந்நிலமை மாற வேண்டும். உற்பத்தியாளர்களின் முயற்சிக்கு சன்மானம் கிடைக்க வேண்டும். இறக்குமதிப் பொருட்களுடன் போட்டி போட வேண்டிய நிலையில் இவை காணப்படுகின்றன. மக்கள் இறக்குமதிப் பொருட்களைப் பெறுவதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். எனவே இந்நிலை மாற வேண்டும்.

**உசாத்துணை**

"அலைமொழி" 2016 மார்ச் - 01, இதல் - 02 Ewswa Digital Press, Thirunelvely, (ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட நூல்)

வாழ்வின் எழுச்சி புள்ளிவிபரத்திரட்டு 2014-2016 (ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்) சமுர்த்தி

வருடாந்த புள்ளி விபர அறிக்கை (2016) பிரதேசசெயலகம் ஊர்காவற்றுறை

வருடாந்த புள்ளிவிபரத்திரட்டு புள்ளிவிபரத்திரட்டு 2015 யாழ்ப்பாண மாவட்டச்செயலகம்

புள்ளிவிபரத்திரட்டு 2010, 2016 கிராமசேவையாளர் - பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசெயலகம் ஊர்காவற்றுறை

David, B. Ekpenyoung and M.O Nyyong (1992), Small and Meedium Scale Enterpise in Ninegeria, their characteristtics and Source of Finance Problem, AERC, Research papers 16, African EconomyResearch Consotium, available at from http://dspaceafricpotral. org /jspw/ bitstreme Census (2016)

MBA Kechukw Agwn and Cletus LZ. Wanne Eneti (2014), Issues, Challenges and Prospects of Small and Medium Scale Enterprises (SMEs) in Port-Harcourt City, Nigeria, *European Journal of Sustainable Development* (2014), **3**, 1, 101-114 ISSN: 2239-5938,http--www.ecsdev.org-images-V3N1-agwu-20101-114.

Memba S.F, Gakure W.R., and Karanjan K., (2012), Venture Capital (V C): Its Impact on Growth of Small and Medium E nterprises in Kenya, International JOurnalof Business and Social Scinece, Vol. 3 No. 6; [Special Issue -March 2012], available at from :https--vc4africa.biz-wp-content-uploads-2012-04-VC-Kenya-Report



ISBN 978-955-627-120-1

Viera Bestivinova(2012), Financiaal and Taz management and Samll and Medium Sise Indutrial Enterprise, Faculty of Materials Sciencen and Techonology in Tranava, Available at from: http://www. Ntf. Stubaisk.docs.doc/casosies/vedecke/prasee/SNBest vinonva.pd



ISBN 978-955-627-120-1